திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தக்காவிக் கடன் என்பது வறட்சி வருகின்ற நிலைமைகளுக்கேற்ப அரசாங்கம் அளிக்கின்ற சலுகை. ஆனால் தற்சமயம் 50 விழுக்காடுகள் வரை விளை பொருட்கள் விளைந்திருக்குமென்றால் அந்த இடங்களில் விவசாயிகள் விளைபொருட்களை இழக்க நேரிடுகிறது. ஆனால் சில வருவாய்த்துறை அதிகாரிகள் உண்மையான நிலைமையில் வறட்சி முழுமையாக ஏற்பட்டிருந்தாலும் கூட, அரசுக்கு இழப்பு ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தவறான தகவலை இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உண்மையிலே வறட்சியிருக்கின்ற இடங்களை மறு ஆய்வு செய்வதற்கு இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர்கள் உத்தரவு வழங்குவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரவு வழங்கப்படும்.

நீர் வரி.

5985—திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடை யளிப்பாரா :

(அ) ஏரி மற்றும் அணைக்கட்டுகளில் இருந்து நீர்ப் பாசனம் பெறும் நிலங்களுக்கு நீர்வரி முழுமையாக வசூலிக் கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், தருமபுரி மாவட்டத்தில் நீர்வரி வசூலிக்கப்படும் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் நீர்வரி வசூலிக்கப்படும் மொத்த நிலப்பரப்பு 8372.98.5 ஹெக்டேர் ஆகும்.

1990 ஏப்ரல் 24]

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் பட்டும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்பதைப்போல என்னுடைய பகுதியில் லாணியாறு, ஈச்சம்பாடி அணைகள் இருந்தும் முறையாக தண்ணீர் விட வேண்டிய கால்வாயில் விடாமல், நீர் வரி வசூலிக்கப்படுகிறது. விவசாயிகள் நீர்ப்பாசன வசதி பெறாமலேயே, அவர்களிடமிருந்து நீர் வரி வசூலிக்கப்படுகிறது. இந்த நிலை அகற்றப்படுமா? வறட்சிக் காலங்களில் நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முல்லைவேந்தனுக்கு திருமணம் செய்து வைத்தவன் நான். ஆகவே அவர் பிரம்மச்சாரி இல்லை என்று நான் கருதுகிறேன். அவர் கேட்ட கேள்விக்குப் பதில், நிச்சயமாக ஆலோசித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் வரி மூலம் இந்த அரசு ஓராண்டில் பெறுகிற வருமானம் எவ்வளவு? அதில் தர்மபுரி மாவட்டத்தில் எந்த அளவிற்கு நீர் வரி வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் பயன் பெற்ற பாசனப் பரப்பு 3,978 எக்டேர். சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பாசனப் பரப்பு 1,008 எக்டேர், பழைய பாசன ஆதாரங்கள் மூலம் பயன் பெற்ற பரப்பு 3,386 எக்டேர். தொகை பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை.